# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 26.11.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் நான் பொறுமை என்ற உயர்ந்த நல்லொழுக்கம் தொடர்பான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை, அன்னாரின் அழகிய முன்மாதிரி மற்றும் சஹாபாக்களின் சில முன்மாதிரிகளை எடுத்து வைத்திருக்கிறேன். இந்த உயரிய நல்லொழுக்கத்தை பேணும்படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தன்னைப் பின்பற்றுகின்றவர்களுக்கு அறிவுரை செய்தார்கள். மேலும் எல்லாவற்றையும் விட முக்கியமாக அன்னார் தனது முன்மாதிரியையும் நிலைநிறுத்திக் காட்டினார்கள். பொறுமை மற்றும் துஆவின் மூலமாக உதவி தேடுங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்பட வேண்டும் என்பதற்காக அன்னார் அவ்வாறு செய்தார்கள். எவர்களுக்கு இறைவன் மீது முழுமையான நம்பிக்கை இருக்குமோ அவர்கள்தான் பொறுமையின் உயர்ந்த முன்மாதிரியை வெளிப்படுத்தியவாறு அல்லாஹ்வின் உதவியைத் தேட முடியும். நமது பொறுமை மற்றும் தூய உள்ளத்துடன் அவன் முன்னிலையில் குனிவதன் மூலம் அல்லாஹ் நிச்சயமாக நமக்கு உதவி செய்வான் என்ற நம்பிக்கை எவர்களுக்கு இருக்குமோ அவர்களால்தான் இவ்வாறு செயல்பட முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட இவ்விஷயத்தில் அதிக ஞானம் மற்றும் நம்பிக்கை கொண்டவர் வேறு யாராக இருக்க முடியும்? அடுத்து அன்னாரின் பரிசுத்த ஆற்றலின் மூலமாக சஹாபாக்களுக்கு இவ்விஷயம் தொடர்பான ஞானமும் நம்பிக்கையும் ஏற்பட்டது. மேலும் சஹாபாக்கள் தங்களுடைய இந்த வழிமுறையின் மூலமாக அல்லாஹ்வின் உதவி பல்வேறு சந்தர்ப்பங்களில் எவ்வாறு தங்களுக்கு கிடைத்தது என்பதையம் கண்டு கொண்டார்கள். பொறுமையைக் கொண்டும் துஆவின் மூலமாகவும் உதவி தேடுங்கள் என்பதன் கருத்தினை இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விட வேறு யார் புரிந்திருக்க முடியும்? மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய சஹாபாக்களிடையே இவ்விஷயத்தை ஏற்படுத்த முயற்சி செய்தார்கள்; ஏற்படுத்தியும் காட்டினார்கள். பல்வேறு வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டுரைகள் வாயிலாக தமது ஜமாஅத்தின் தர்பியத்தை கருத்தில் கொண்டு (பொறுமை என்ற) இந்த நல்லொழுக்கத்தில் நிலைநிற்கும்படி அறிவுரை செய்தார்கள். ஆக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்த உண்மைப் பேரன்பரின் ஜமாஅத்து தான் இன்று உலகில் பொறுமை என்ற நல்லொழுக்கத்தை கடைபிடித்தவாறு அல்லாஹ்விடத்தில் உதவி தேடுகிறது. மேலும் அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு தமது உள்ளத்தின் நிலையை அவனிடத்தில் மட்டும் வெளிப்படுத்தி வருகின்றது. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவையனைத்தையும் தமது முன்மாதிரியின் மூலமாக நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். அந்த தர்பிய்யத்தின் தாக்கம் இன்றுவரை ஜமாஅத்தில் இருந்து வருகின்றது. அதன் விளைவாகத்தான் ஜமாஅத் எல்லா துன்பங்களுக்கு இடையிலும் அந்த முன்மாதிரி, பொறுமையை பேணி வருகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு நபித்துவ வாதத்திற்குப் பிறகு எல்லா வகையான கடினங்களையும் சந்திக்க நேரிட்டது. சகிப்புத் தன்மையையே அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அன்னார் மட்டும் இதனை வெளிப்படுத்தவில்லை. மாறாக, நீங்கள் என்னோடு இணைந்திருக்க வேண்டும் என்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய முன்மாதிரியை நீங்களும் நிலைநாட்ட வேண்டும். மேலும் எந்த முன்மாதிரியின்படி செயல்படுவதற்காக சஹாபாக்கள் தமது வாழ்க்கையை கழித்தார்களோ, அதன்படி நீங்கள் செயல்பட வேண்டும் என்று அன்னார் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் சிறிய விஷயம் முதல் பெரிய விஷயம் வரை பொறுமை என்ற நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தினார்கள் என்பது தொடர்பான சில சம்பவங்களை அன்னாரின் வாழ்க்கையிலிருந்து நான் எடுத்து வைப்பேன். மேலும் அதன்படி செயல்படும்படி தன்னை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் அன்னார் கண்டிப்பான முறையில் அறிவுரை செய்துள்ளார்கள்.

அல்லாஹ் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு நேரடியாக இல்ஹாம் மூலமாக பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை எப்போதும் பேணி வர வேண்டும் என கவனமூட்டினான். என்ன நிலை ஏற்பட்டாலும் சரி! எதிரி எவ்வளவுதான் கீழ்த்தரமான செயலில் ஈடுபட்டாலும் சரி! பாதிப்பை ஏற்படுத்த என்னதான் முயற்சிகளை செய்தாலும் சரி நீங்கள் ஒருபோதும் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை கைவிட்டு விடக் கூடாது. துஆவின் மூலமாக அல்லாஹ்விடத்தில் உதவி தேடிக் கொண்டே செல்ல வேண்டும். மேலும் அல்லாஹ்வின் உதவியை எதிர்பார்த்தவாறு இருக்க வேண்டும். அல்லாஹ்வின் புறமிருந்து அல்லாஹ்வின் அடியார்களுக்கு சோதனைகள் வரத்தான் செய்யும். ஆனால் அல்லாஹ்வின் அடியார்கள் அதனை அல்லாஹ்வுக்காக சகித்துக் கொள்வார்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஒரு முன்னறிவிப்பை பராஹீனே அஹ்மதிய்யாவில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

இங்கே சோதனை உள்ளது. எனவே எவ்வாறு **உறுதிமிக்கவர்கள் பொறுமை செய்தார்களோ அதுபோன்று நீ பொறுமை செய்வீராக!** இறைவன் புறமிருந்து இந்த சோதனை வந்துள்ளது. அல்லாஹ் உங்களை முழுமையாக நேசிக்க வேண்டும் என்பதற்காக இந்த சோதனை ஆகும். மிகவும் கண்ணியமிக்க இறைவனின் நேசம், மன்னிப்பு ஒருபோதும் நின்று விடாது.

ஆக நபித்துவ வாதம் மற்றும் பைஅத் வாங்குவதற்கு முன்னரே பொறுமை என்ற உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று அல்லாஹ் அன்னாருக்கு வழங்கிய அறிவுரையை அன்னார் தனது வாழ்க்கையின் இறுதி மூச்சு வரை கடைபிடித்தார்கள். நான் கூறியது போன்று அது சம்பந்தமான சில உதாரணங்களையும் எடுத்து வைப்பேன்.

**யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

1898 -ல் ஒருமுறை மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் ஏச்சுப் பேச்சுக்களால் நிறைந்த கட்டுரை ஒன்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். இன்று சுமார் 30 வருடங்கள் ஆகி விட்டன. நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை சீர்தூக்கியவாறு அதனை நான் இப்போது படிக்கும் போது கூட என் கண்களிலிருந்து என்னையும் அறியாமல் கண்ணீர் வந்து விடுகின்றன. ஏச்சுப்பேச்சு மற்றும் தீய வார்த்தைகளால் நிரம்பிய அந்த பத்திரிகைக்கு மிகவும் மென்மை, பொறுமை மற்றும் சகிப்புத்தன்மை நிறைந்த பதிலையே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அன்னாரின் பொறுமை நிறைந்த இயல்பை எந்த விஷமும் அசைக்க முடியவில்லை. அன்னார் கண்ணியமான இயல்பைக் கொண்டிருந்தார்கள். பொறுமையின் சிகரமாக அன்னார் விளங்கினார்கள்.

அன்னார் பொறுமை மிக்க மனிதர் என்பதற்கு இவ்விஷயம் ஒரு சான்றாகும். அதாவது எவ்வகையான ஏச்சுப் பேச்சுக்களும் அன்னாரிடத்தில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

**உறுதிமிக்கவர்கள் பொறுமை செய்தார்களோ அதுபோன்று நீ பொறுமை செய்வீராக!** என்ற இல்ஹாம் உண்மையில் இறைவன் புறமிருந்து இறங்கியது என்பதற்கு இவ்விஷயம் ஒரு சான்றாகும். மேலும் அவ்விறைவனே உறுதிமிக்க தூதர்களுக்கு வழங்கப்படுகின்ற பொறுமையை அற்புதமான முறையில் அன்னாருக்கும் வழங்கினான். அல்லாஹ் முன்பாகவே அன்னாருக்கு பல சோதனைகளைப் பற்றி அறிவித்து கொடுத்தான். மேலும் அந்த சோதனைகள் அக்காலத்தில் மிகக் கடுமையாக வெளிப்படவும் செய்தன. ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அன்னாரின் பாதங்கள் தடுமாற்றம் அடையவில்லை.

**தொடர்ந்து யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) ஒரு சம்பவத்தை குறிப்பிட்டவாறு எழுதுகின்றார்கள்.**

ஒரு இந்து மத தலைவர் ஏறக்குறைய அம்பாஸ் மோஷம்தார் பாபு என நினைக்கிறேன். ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம் ஒரு கூட்டத்தில் சில கேள்விகளைக் கேட்டு கொண்டிருந்தார். அதே சமயத்தில் ஒரு தீய இயல்பு கொண்ட மனிதன் வந்தான். அவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக மிகவும் வேதனைமிக்க மற்றும் கீழ்த்தரமான ஆட்சேபனைகளை செய்தான். அந்த சம்பவம் இப்போது கூட என் கண் முன்னால் நிற்கின்றது என யாகூப் அலி சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வழக்கத்திற்கேற்ப அமைதியாக அமர்ந்து, ஏச்சுப் பேச்சுக்களை கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த தீயவனோ தொடர்ந்து கத்திக் கொண்டிருந்தான். குழப்பத்தை ஏற்படுத்த நாடிய அவன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதுவுமே நடைபெறாதது போன்று மிகவும் மௌனமாக, நிம்மதியாக அமர்ந்திருந்தார்கள். அந்த இந்துமதத் தலைவர் அவனை தடுக்க முயற்சி செய்தார். ஆனால் அவன் அதனை பொருட்படுத்தவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரை ஒன்றும் கூறாதீர்கள். அவன் கூறுவதை கூற விடுங்கள் என அவரிடம் கூறினார்கள். கடைசியில் அவன் ஏசிப் பேசி அவனே சோர்வடைந்து அங்கிருந்து சென்று விட்டான். இதனால் அந்த இந்து தலைவர் மிகவும் தாக்கத்திற்குள்ளானார். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இது உங்களுடைய மிகப்பெரிய நல்லொழுக்க அற்புதம் எனக் கூறினார். அந்த நேரத்தில் ஹுஸூர் அவனை பேச விடாமல் தடுத்திருக்க முடியும். வீட்டை விட்டு அவனை வெளியேற்றியிருக்க முடியும். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டில் வைத்துதான் அவனுடைய அந்த தகாத செயலுக்காக அன்னாரின் சிறிய சைகையினால் அவனது நாவு துண்டிக்கப்பட்டிருக்கும். ஆனால் அன்னாரோ தனது முழுமையான பொறுமை மற்றும் சகிப்புத்தன்மைக்கான செயல்ரீதியான ஆதாரத்தை வெளிப்படுத்தினார்கள்.

**ஷேக் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்.**

ஜலந்தர் வீட்டில் மீர் அப்பாஸ் அலி சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் அமர்ந்து கொண்டு சில ஆட்சேபனைகளை செய்து கொண்டிருந்தார். அந்த சபையில் மார்க்கத் தொண்டர் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள்தான் எனக்கு இந்த சம்பவத்தைக் கூறினார்கள். அன்னார் கூறினார்கள்:

மவ்லவி மீர் அப்பாஸ் அலி சாஹிப் ஒரு ஆட்சேபனை செய்தார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் பொறுமையுடன், மென்மையாக பதிலளித்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆட்சேபனைகளுக்கு பதிலளிக்கும் போது எந்த அளவுக்கு பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையைக் கையாண்டு வந்தார்களோ அந்த அளவுக்கு மீர் சாஹிப் மறுப்பதில் முன்னேறிக் கொண்டிருந்தார். எந்த அளவுக்கு என்றால் அவர் மிகவும் தரம் குறைந்தும் அவமரியாதையாகவும் நடந்து கொண்டார். மேலும் எல்லா வகையான நல்லொழுக்க நிலைகள் மற்றும் கண்ணியத்தை மறந்து நீ, நீ என்று ஏக வசனத்தில் பேசத் தொடங்கினார். ஆனால் அந்நிலையிலும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், மீர் சாஹிப் அவர்களே! நீங்கள் என்னுடன் வாருங்கள். 40 நாட்கள் என்னுடன் தங்குங்கள். அல்லாஹ் கண்டிப்பாக உங்களுக்கு ஏதாவது அடையாளத்தை வெளிப்படுத்தி விடுவான் என்று மீர் சாஹிபிடம் கூறுவதையே நான் பார்த்தேன். ஆனால் மீர் சாஹிபின் கோபமும் தீய நடத்தையும் அதிகரித்துக் கொண்டே சென்றது.

**மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை நான் பார்த்தும் கூட என்னால் மீர் அப்பாஸ் அலி அவர்களின் தீய நடத்தையைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. வெகு நேரமாக மவுனமாக அமர்ந்திருந்த நான் என் முன் ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம் இவர் அவமரியாதையாக நடக்கின்றார். நானோ அதை சகித்துக் கொண்டு ரோஷமற்றவனாக உள்ளேனே என எண்ணி என்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. எனவே அவரை நோக்கி ஒரு உரத்த குரல் கொடுத்தேன். அதன் விளைவாக அவர் எழுந்து ஓடிவிட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையைப் பார்த்து எனது செயலின் மீது எனக்கு வெட்கம் ஏற்பட்டது. ஆனால் அவன் என் முன்னால் ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம் அவமரியாதையாக பேச அதை நான் சகித்துக் கொள்ளும் அளவுக்கு நான் தன்மானம் அற்றவனாக இருக்கவில்லை என்பதை எண்ணி நான் மகிழ்ச்சியும் அடைந்தேன். ஆனால் எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் என் முன் உள்ளார்கள் என்ற உணர்வு என்னிடத்தில்

மேலோங்கியிருக்க வேண்டுமே என்ற ஞானம் எனக்கு பின்னர் கிடைத்தது. அதாவது அந்த கண்ணியத்தை கருத்தில் கொண்டு என் உள்ளத்தில் இருந்த உணர்வினை அடக்கி நான் அமைதியாக இருந்திருக்க வேண்டும்.

**அடுத்து ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தனது கல்வியறிவின் மீது ஆணவம் கொண்டிருந்த ஒரு இந்தியர் ஒருவர் இருந்தார். நான் உலகில் பல இடங்களுக்கு சென்றுள்ளேன். பல காலகட்டங்களை கண்டுள்ளேன். உலகின் எல்லா விஷயங்களைப் பற்றியும் எனக்கு அறிவு உள்ளது என அவர் தன்னை மிகவும் பெருமையாகக் கருதி வந்த அவர் நம் பள்ளிக்கு ஒருநாள் வந்தார். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அன்னாரின் வாதம் தொடர்பாக அநாகரிகமாக விவாதம் செய்து வந்தார். சிறிது விவாதத்திற்குப் பின்னர் நீங்கள் உங்கள் வாதத்தில் பொய்யர் ஆவீர்கள் என நேரடியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினார். நான் இதுபோன்ற பொய்யர்கள் பலரைப் பார்த்துள்ளேன். நவூதுபில்லாஹ். இதுபோன்றவர்கள் எனக்கு தூசுக்கு சமம். சுருக்கமாக இதுபோன்ற தரக்குறைவான வார்த்தைகளைக் கூறினார். ஆனால் அதனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முகத்தில் எந்த தாக்கமும் ஏற்படவில்லை. மிகவும் மென்மையாக பதிலளிக்கத் தொடங்கினார்கள். ஒருவருடைய கூற்று எவ்வளவுதான் அறிவீனமானதாகவும் பொருத்தமற்றதாகவும் இருந்தாலும் அன்னார் அதனைக் கேட்கும் போதோ அல்லது தனிமையிலோ அந்த நபர் மீது வெறுப்பையும், ஆட்சேபனையையும் வெளிப்படுத்தியதில்லை. சில சமயம் சபையில் உள்ளவர்கள் இதுபோன்ற அறிவீனமான அநாகரிகமான வார்த்தைகளை செவியேற்று எழுந்து விடுவார்கள். அல்லது தங்களுக்கிடையில் அந்த நபர் எந்த அளவுக்கு தரக் குறைவாக நடந்து கொண்டார் என சர்ச்சை செய்து தங்கள் கோபத்தை வெளிப்படுத்துவார்கள்.

ஆனால் இறைவனின் அடியார் மற்றும் மென்மை உள்ளம் படைத்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருபோதும் இதுபோன்ற வெறுப்பை வெளிப்படுத்தியது கிடையாது.

**ஷேக் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் 1904 ஜனவரி 29ம் தேதி சம்பவம் ஒன்றைக் கூறுகின்றார்கள்.**

இந்த பத்திரிகை மிகவும் ஏசிப் பேசுகின்றது என ஒரு பத்திரிகை தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் கூறப்பட்டது. அதற்கு அன்னார் பொறுமை செய்ய வேண்டுமென பதிலளித்தார்கள். இந்த ஏச்சுப் பேச்சுக்களால் என்ன ஆகிவிடும்? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மக்கள் அன்னாரை இவ்வாறுதான் விமர்சனம் செய்தார்கள். நவூதுபில்லாஹ் அன்னாரை இழிவுக்குறியவர் எனக் கூறி வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் புன்னகை செய்தவாறு நான் இவர்களின் ஏளனத்தை ஏன் பொருட்படுத்த வேண்டும்? அல்லாஹ் எனக்கு முஹம்மத் (மிகவும் புகழப்பட்டவர்) என பெயர் வைத்துள்ளான் எனக் கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதேபோன்று தான் அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான். அல்லாஹ் என் தொடர்பாக, **அல்லாஹ் தனது அர்ஷிலிருந்து என்னை புகழ்கின்றான்** என்று கூறியுள்ளான். இந்த இல்ஹாம் பராஹீனே அஹ்மதிய்யாவில் இடம்பெற்றுள்ளது.

**அடுத்து ஷேக் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு நேர் எதிரில் மாத்திரம் தீய தாக்குதல் நடைபெறவில்லை. மேலும் அன்னாரின் மீது கடைவீதியில் கொலைவெறித் தாக்குதல் நடைபெற்றது. மேலும் அன்னாரை கொலை செய்ய வேண்டும் என்ற ஃபத்வா மற்றும் முயற்சிகளும் செய்யப்பட்டன. கொலை செய்வதற்கு ஃபத்வா வழங்கப்பட்டது. முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இதோடு எதிரிகள் நின்றுவிடவில்லை. மாறாக ஏச்சுப் பேச்சுகள் நிறைந்த, முகவரியற்ற, தபால்தலை ஒட்டாத கடிதங்களையும் எதிரிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பி வந்தனர். இவ்வாறு தபால்தலை ஒட்டாமல்

கடிதங்கள் அனுப்பப்படும்போது, அக்கடிதங்களைப் பெறுபவர் தபால்தலைக்குரிய பைசாவை கொடுத்து கடிதத்தை பெற வேண்டும். இவ்வாறு அனுப்பப்பட்ட கடிதங்களை தபால்தலைக்குரிய பைசாவையும் கொடுத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பெற்று வந்தார்கள். அதனை திறந்து படிக்கும் போது ஆரம்பம் முதல் கடைசி வரை தீய ஏச்சுப் பேச்சுகளைத் தவிர அதில் வேறொன்றும் இருப்பதில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதனை பொருட்படுத்துவதில்லை. அந்த தீயவர்களுக்காக துஆ செய்து விட்டு அக்கடிதங்களை ஒரு பையில் போட்டு விடுவார்கள். அந்நாட்களில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவி எதிர்ப்பில் மிகவும் முன்னணியில் இருந்தார். தனது ஏச்சுப் பேச்சுகளோடு நின்றுவிடாமல் சாதுல்லாஹ் லூதியானா மற்றும் ஸஃபர் டெல்லி மற்றும் இன்னும் வேறு சிலரை தனது நண்பராக ஆக்கி வைத்திருந்தார். இவ்வாறு அவர்கள் எல்லா வகையான ஏளனமும் செய்வார்கள். ஆனால் இறைவனிடமிருந்து, உம்மை யார் இழிவுபடுத்துவாரோ அவரை நாம் இழிவுபடுத்துவோம் என்ற இல்ஹாம் இறை அடியாரான அன்னாருக்கு ஆறுதலை வழங்கியது. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சகிப்புத்தன்மையுடன் அந்த கீழ்தரமான எழுத்துக்களை ஏச்சுப் பேச்சுக்ககளை கடந்து சென்று விடுவார்கள்.

1898 –ல் ஒருமுறை மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவி ஏச்சுப் பேச்சுக்களால் நிறைந்த தனது கட்டுரை ஒன்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்.

**1898 ஜுலை 17 ம் தேதி அல்ஹகம் பத்திரிகையில் அது வெளியாகியுள்ளது.**

இன்னும் 30 ஆண்டுகளுக்கு பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பொறுமை, சகிப்புத்தன்மை மற்றும் இறை நம்பிக்கையை சீர்தூக்கியவாறு நான் அதனை படிக்கும் போது எனது கண்கள் கண்ணீரால் நிரம்பி விடுகின்றது. பழைய சம்பவங்களை நினைவு கூறும் போது இப்போதும் அழுகை வந்து விடுகிறது என உருது கவிதை ஒன்றை அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

1898 ஜுலை 25 ம் தேதி ஒரு சம்பவம். மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்களின் ஒரு கட்டுரையை ஒரு நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் கொண்டு வந்தார். அவரை மவ்லவி ஹுஸைன் சாஹிப் அனுப்பி வைத்திருந்தார். ஹுஸுர் அவர்கள் அந்த கட்டுரையைக் கொண்டு வந்த நபரிடம் வாக்கியம் ஒன்றை எழுதி அதனை திருப்பி அனுப்பி வைத்து விட்டார்கள். அதுவே அன்னாரின் பதிலாக இருந்தது. அந்த பதிலை மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் சபையினருக்கு வாசித்துக் காட்டினார்கள். அதற்கு எல்லாரும் ஆமீன் எனக் கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அளித்த பதில் இதுவாகும்.**

அதாவது என் இறைவா! இந்த கட்டுரை எழுதிய நபர் தமது கூற்றில் உண்மையாளர் என்றால் அவருக்கு நீ கண்ணியத்தை வழங்குவாயாக! அவர் பொய்யர் என்றால் நீயே அவரை பிடிப்பாயாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதைவிட அதிகமாக வேறொன்றும் பதில் கூறவில்லை.

**ஹஸ்ரத் மீர் பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் சவுத்ரி ஹாகம் அலி சாஹிப் தன்னிடம் கூறியதாக இவ்வாறு கூறுகின்றார்கள்.**

ஹஸ்ரத் சாஹிப் ஒருமுறை பெரிய பள்ளியில் குத்பாவோ அல்லது சொற்பொழிவோ செய்து கொண்டிருந்தார்கள். ஒரு சீக்கியர் பள்ளியினுள் நுழைந்து வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு முன் நின்று கொண்டு அன்னாருக்கு எதிராகவும் அன்னாரின் ஜமாஅத்திற்கு எதிராகவும் மிகவும் கடினமான, தீய பேச்சுக்களை பேசிக் கொண்டிருந்தான். அவர் தனது ஏச்சுப் பேச்சுகளை நிறுத்தவே இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமைதியாக கேட்டுக் கொண்டே இருந்தார்கள். ஹஸ்ரத் சாஹிப் அனுமதி வழங்கியிருந்தால் சிலர் அங்கேயே அவனை அடித்து நொறுக்கியிருப்பார்கள். அந்த அளவுக்கு சிலருக்கு கோபம் வந்தது. ஆனால் அனைவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பயந்து மவுனமாக இருந்தார்கள். இறுதியில் அவன் தனது ஏச்சுப் பேச்சுகளில் வரம்புமீறிய போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரண்டு நபர்களிடம் அவனை பள்ளியிலிருந்து மாத்திரம் வெளியேற்றி

விடுங்கள். அவனை ஒன்றும் கூறாதீர்கள் என்று கூறினார்கள். அவன் செல்லவில்லை என்றால் அவனை காவல்துறையினரிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் தன்னிடம் ஹாஃபிழ் ரோஷன் அலி சாஹிப் (ரலி) அவர்கள் கூறியதாக இந்த சம்பவத்தை அறிவிக்கின்றார்கள்.

காதியானில் மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்கான ஏற்பாடு நடந்த போது காதியான் மக்கள் அரசாங்க அதிகாரிகளுக்கு இந்த மினாரத்துல் மஸீஹ் கட்டுவதன் மூலமாக எங்கள் வீட்டில் மறைவிருக்காது என புகார் கூறினார்கள். எனவே அதனை விசாரிக்க அரசாங்க அதிகாரி ஒருவர் காதியான் வந்தார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை முபாரக் பள்ளிவாயிலுக்கு அருகிலுள்ள அறையில் சந்தித்தார். அப்போது புகார் செய்த காதியானைச் சேர்ந்த மக்களும் அவருடன் இருந்தனர். அப்போது ஹஸ்ரத் சாஹிப் அந்த அதிகாரியிடம் கூறினார்கள். இதோ பாருங்கள். இங்கே இந்து (நண்பர்) ஒருவர் அமர்ந்துள்ளார். இவரிடத்தில் கேளுங்கள். குழந்தைப் பருவம் முதல் இன்று வரை இவருக்கு நன்மை செய்யும் வாய்ப்பு எனக்கு கிடைத்தபோதெல்லாம் இவருக்கு நன்மை செய்வதில் நான் இவருக்கு குறைவு ஏதும் வைத்தேனா? அதேபோன்று இவர் குழந்தைப் பருவம் முதல் இன்று வரை எனக்கு தீங்கிழைக்க அவருக்கு வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் எனக்கு தீங்கிழைத்ததில் குறை ஏதும் வைத்தாரா? என இவரிடத்தில் கேளுங்கள் என ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள்.

**ஹாஃபிழ் ரோஷன் அலி சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் அப்போது அந்த நபரைப் பார்த்து கொண்டிருந்தேன். அவர் வெட்கத்தால் தலை குனிந்து நின்றார். அவரால் ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை. எந்த எதிரி இடத்தில் சிறிதளவு கூட உணர்விருக்குமோ அவர் இதுபோன்று உண்மையை நேருக்கு நேர் சந்திக்கும் போது வெட்கத்தினால் தலை குனிந்து விடுவார். ஆனால் இன்றைய எதிரிகளுடைய அனைத்து நல்லுணர்வுகளும் அழிந்து நாசமாகி விட்டன. கடுகளவு கூட இவர்களிடத்தில் நல்லுணர்வில்லை.

**ஹஸ்ரத் ஷேக் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

1903 –ல் ஒரு டாக்டர் சாஹிப் லக்னோவிலிருந்து வந்தார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் சில கேள்விகளை கேட்டார். அவருடைய கூற்றில் ஆணவமும், ஏளனமும் அதிகமாகியிருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சற்றும் அதனை பொருட்படுத்தாமல் அவருடைய கேள்விக்கு பதிலளித்து வந்தார்கள். அவர் ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் அரபியில் மிக புலமை பெற்றிருப்பதாகவும் உங்களோடு யாரும் அதில் போட்டி போட முடியாது எனவும் வாதிடுகின்றீர்களே! என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்டார். அதற்கும் அல்லாஹ் எனக்கு அரபி கற்றுத் தந்துள்ளான். நான் அவ்வாறு வாதம் செய்துள்ளேன் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். உடனே அவர் மிகவும் ஏளனம் செய்தவாறு கூறினார். நீங்கள் அரபியில் புலமை பெற்றதாக கூறுகின்றீர்கள். ஆனால் உங்களால் காஃப் என்ற சொல்லை சரியாக உச்சரிக்க முடியவில்லை எனக் கூறினார். ஷேக் சாஹிப் சம்பவத்தைப் பற்றி கூறுகின்றார்கள்.

நான் அப்போது அந்த சபையில் இருந்தேன். அந்த நபரின் பேச்சு மிகவும் துன்பம் தரக்கூடியதாக இருந்தது. என்னால் அதனை பொறுத்து கொள்ள முடியவில்லை. ஆனால் ஹஸ்ரத் சாஹிபின் மென்மையின் காரணமாக அமைதியாக இருந்தோம். ஆனால் அந்த சபையில் அமர்ந்திருந்த மவ்லானா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீது அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் எழுந்து ஹஸ்ரத் அவர்கள் பொறுமை செய்கின்றார்கள் என்று கூறினார். இவ்வாறாக அந்த நபருக்கும் மவ்லானா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீதிற்கும் இடையே வாதம் மூண்டது. இருவரும் அடிதடியில் இறங்கும் நிலை ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது தூய விசுவாசமிக்க சீடரை தடுத்து நிறுத்தினார்கள். அப்போது அந்த நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நோக்கி கூறினார். ஏச்சுப் பேச்சுக்களை கேட்பது என்பது நபிமார்களின் சொத்தாகும். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். நான்

ஒருபோதும் கோபப்படவில்லையே! மவ்லவி சாஹிப் ஏதாவது செய்தார்கள் என்றால் அது அவர்களின் உணர்வின் வெளிப்பாடாகும். மேலும் அவரை நான் தடுத்து விட்டேன்.

**ஷேக் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

அந்த நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காஃப் என்ற சொல்லை சரியாக உச்சரிப்பதில்லை என்று ஆட்சேபனை செய்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பதிலளித்தார்கள்.

என்னுடைய உச்சரிப்பு லக்னோவை சார்ந்ததாக இருப்பதற்கு நான் ஒன்றும் லக்னோவைச் சேர்ந்தவனல்ல. மாறாக நான் பஞ்சாபி ஆவேன். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மீதும், **தெளிவாகப் பேச முடியாதவர் (43:53)** என ஆட்சேபனை செய்யப்பட்டது. மேலும் அவரது பேச்சில் திக்குதல் இருக்கும் என ஹதீஸில் இமாம் மஹ்தியைப் பற்றி வந்துள்ளது.

ஹஸ்ரத் அப்துல் லத்தீஃப் அவர்கள் அவ்வாறு நடந்து கொண்ட போது அந்த சபையில் அமர்ந்திருந்தவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு அறிவுரை செய்தார்கள்.

என்னைப் பொருத்தவரை ஒரு விருந்தாளி நம்மிடத்தில் வந்து ஏச்சுப் பேச்சுகளை கையாண்டால் நாம் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர் சீடர் இல்லை. சீடரிடத்தில் எதிர்பார்க்கின்ற கண்ணியத்தையும், மரியாதையையும் வருபவரிடத்தில் எதிர்பார்க்க என்ன உரிமை உள்ளது? வருபவர் நம்மிடத்தில் மென்மையாக பேசினால் அதனை நான் அவரது உபகாரமாக கருதுவேன். ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உங்களுக்கு விருந்தாளிகள் மீது சில கடமைகள் உள்ளன. எனவே விருந்தாளிக்கு சிறிதளவு துன்பம் ஏற்பட்டாலும் அது பாவமாகி விடும் என நான் கருதுகிறேன். எதுவரை புரிந்து கொள்வதில்லையோ அதுவரை அவர்களுக்கு பேசுவதற்கு உரிமையுள்ளது.

மீர் ஷஃபீ அஹ்மத் சாஹிப் அவர்கள் கடிதம் மூலமாக தனக்கு கூறியதாக இவ்வாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் சாஹிப் கடைசியாக லாஹூர் சென்று தங்கியிருந்த போது நான் காஜா கமாலுத்தீன் சாஹிபின் ஊழியராக இருந்தேன். தபால்களை சேகரித்து அன்னாரிடத்தில் கொண்டு சேர்ப்பேன். தபாலில் சில கடிதங்கள் தபால்தலை ஒட்டப்படாமலும் இருக்கும். இது தொடர்பாக தொடக்கத்திலும் நான் கூறியிருக்கிறேன். தபால்தலை ஒட்டப்படாமல் வரும் கடிதங்களில் தீய ஏச்சுப் பேச்சுக்களே நிரம்பியிருந்தன. ஒருநாள் நான் காஜா சாஹிப் முன்னிலையில் தபால்தலை ஒட்டப்படாத கடிதங்களுக்குரிய ஒரு சில கடிதங்களுக்கு பைசா கொடுத்து கடிதங்களைப் பெற்ற போது காஜா சாஹிப் என்னை தடுத்து நிறுத்தினார்கள். இதுபோன்று தினமும் கடிதங்களைப் பெற்று ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம் கொண்டு சேர்த்து விடுவேன். மேலும் ஹஸ்ரத் சாஹிப் எனக்கு அந்த தபால்தலை ஒட்டப்படாத கடிதத்திற்குரிய பைசாவை திருப்பி தந்து விடுவார்கள் எனக் கூறினேன். அதன் பின்னரும் காஜா சாஹிப் என்னை கண்டிப்புடன் தடுத்து நிறுத்தி விட்டார்கள். நான் கடிதங்களை கொடுக்க ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம் சென்ற போது நான் கூறினேன். ஹுஸூர் இன்று காஜா சாஹிப் என்னை தபால்தலை ஒட்டப்படாத கடிதத்தை பெறக் கூடாது என கண்டிப்புடன் தடுத்து நிறுத்தி விட்டார்கள். ஹுஸூர் இப்போது நீங்கள் கூறினால் நான் ஓடிச் சென்று தபால் நிலையத்திலிருந்து தபாலை வாங்கி வந்து விடுகிறேன் எனக் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் சாஹிப் சிரித்தபடி கூறினார்கள். இந்த தபால்தலை ஒட்டப்படாத கடிதங்களில் ஏச்சுப் பேச்சுகளைத் தவிர்த்து வேறொன்றும் இருப்பதில்லை. மேலும் கடிதமும் மொட்டைக் கடிதமாக இருக்கின்றது. அந்த மக்கள் தங்கள் பெயர் மற்றும் முகவரி எழுதியிருந்தால் நம்மால் அவர்களுக்கு புரிய வைக்கலாம். அவர்களுக்கெதிராக நாம் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து விடுவோமோ என அவர்கள் அஞ்சுகின்றனர். அனால் நமது நோக்கம் அதுவல்ல. நமது பணி வழக்கு தொடுப்பது அல்ல.

அன்னார் கூறுகின்றார்கள்: அந்நாளுக்குப் பிறகு தபால் தலை ஒட்டப்படாமல் வருகின்ற மொட்டை கடிதங்களை நான் பெறுவதை கைவிட்டு விட்டேன்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஹாஃபிழ் காமித் அலி சாஹிப் அவர்களின் மனைவி ரஸுல் பீபி சாஹிபா மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் ஜெட் மூலமாக என்னிடத்தில் கூறினார்கள்.

சில சமயத்தில் மிர்ஸா நிஸாமுத்தீன் சார்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏசிப்பேச சில நபர்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள. ஆக எவர் அவ்வாறு நியமிக்கப்படுவாரோ அவர் முழு இரவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக ஏசிப் பேசி வந்தார். முழு இரவும் நின்று கொண்டு உரத்த குரலில் அன்னாரை ஏசிப் பேசிக் கொண்டிருந்தார். ஷஹ்ர் நேரம் வந்த போது அந்த மனிதன் முழு இரவும் ஏசிப் பேசி சோர்ந்து போயிருப்பான். எனவே அவனுக்கு சாப்பிடுவதற்கு ஏதாவது கொடுங்கள். அவரது தொண்டை வறண்டு போயிருக்கும் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தாதி சாஹிபிடம் கூறுவார்கள். இதுபோன்ற தீயவர்களுக்கு ஒன்றும் கொடுக்கக் கூடாது என்றுதான் நான் தாதி சாஹிபிடம் கூறுவேன். நாம் ஏதாவது தவறு செய்தால் அதனை இறைவன் பார்க்கிறான். நம் தரப்பில் தவறு ஏதும் இருக்கக் கூடாது என அன்னார் கூறுவார்கள்.

**மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சபையில் எந்த எதிரியைப் பற்றியும் பேசமாட்டார்கள். யாரையும் அவப்பெயருடன், பட்டப்பெயருடன் நினைவு கூர்வது கிடையாது.

முதலாவது அவர்கள் எந்த எதிரியைப் பற்றியும் சபையில் பேசுவதே கிடையாது. அவ்வாறு பேச்சு வந்து விட்டாலும் கூட அவரை தீய பெயருடன் நினைவு கூர்ந்தது கிடையாது. அன்னாரின் உள்ளத்தில் எவ்வித பகைமை உணர்வும் இருந்ததில்லை என்பதற்கு இது தெளிவான சான்றாகும். ஏனென்றால் அன்னார் ஓர் உலகவாதியாக இருந்திருந்தால் சமுதாயம் எள்ளி நகையாடிய விதம் மற்றும் மவ்லவிமார்கள் நடந்து கொண்ட முறையின் காரணமாக இரவும் பகலும் அன்னார் எதிரிகளைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள். கவலையடைந்திருப்பார்கள். அன்னாரின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டிருக்கும். அன்னாரின் எழுத்துக்களில் எதிரிகளைப் பற்றிய வார்த்தைகளை வைத்து அன்னார் இரவு பகலாக எதிரிகளைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார்கள் என்றும் எண்ணக் கூடாது. இல்லை. அவ்வாறு ஒருபோதும் இல்லை. ஒரு நீதிபதி செயல்படுவது போன்று தான் அன்னாரின் நிலை இருந்தது. ஒரு நீதிபதி சட்டத்திற்குட்பட்டு தீர்ப்பு எழுதுகின்றார். அதோடு அவரது பணி முடிந்து விடும். அதுபோன்றுதான் அன்னாரின் நிலையும். என்ன எழுது வேண்டுமோ, எதனை எழுத நாடினார்களோ அன்னார் எழுதி விட்டார்கள். எழுதிய பிறகு எதிரிகளைப் பற்றி ஒன்றும் பேசுவது கிடையாது. எவ்வாறு நீதிபதிக்கு எவர் மீதும் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி இருப்பதில்லையோ அதே போன்று ஹஸ்ரத் சாஹிப் உண்மையை வெளிப்படுத்த பொய்யை தெளிவுபடுத்த அல்லாஹ்வுக்காக எழுதி வந்தார்கள். இதை தவிர அன்னார் ஒன்றும் செய்வதில்லை. அன்னாருடைய உள்ளத்தின் விருப்பத்தின் எந்த தலையீடும் அதில் இருப்பதில்லை.

**ஒருநாள் ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள்:**

நான் எனது மனதின் மீது எந்த அளவுக்கு கட்டுப்பாடு கொண்டவனாக உள்ளேன் என்றால் மேலும் அல்லாஹ் எனது உள்ளத்தை எந்த அளவுக்கு முஸ்லிமாக ஆக்கியுள்ளான் என்றால் ஒரு நபர் ஒரு வருடம் முழுவதும் என் முன் நின்று என்னை மிகவும் கீழ்த்தரமாக ஏசிப் பேசினாலும் இறுதியில் அவரே வெட்கத்திற்குள்ளாவார். என்னை ஒன்றும் அசைக்க முடியவில்லை என்பதை அவர் ஒப்புக் கொள்ள நேரிடும்.

**ஹஸ்ரத் மீர் பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:**

நமது ஜமாஅத்தின் பெரும்பான்மையான பழைய சகோதரர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சிறிய தந்தையார் வழி சகோதரர்களான மிர்ஸா நிஸாமுத்தீன் சாஹிப் மற்றும் மிர்ஸா இமாமுத்தீன் சாஹிப் அவர்களை நன்கறிவார்கள். அவர்கள் இருவரும் தங்களுடைய மார்க்கமற்ற தன்மை மற்றும் உலக விஷயங்களின் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கடும் எதிரிகளாக

திகழ்ந்தனர். உண்மையில் அவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளாகவே இருந்தனர். ஒருமுறை அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக தங்களுடைய வீட்டிற்கு முன் முபாரக் பள்ளவாசலுக்கு அருகில் சுவர் போன்ற ஒன்றை எழுப்பி பாதையை அடைத்து விட்டார். அதனால் தொழுகையாளிகளுக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்க வருபவர்களுக்கு பெரும் சங்கடம் ஏற்பட்டது. கைது செய்யப்பட்ட நிலையைப் போன்ற நிலை தோன்றியது. எனவே நீதிமன்றத்தை அணுக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த வழக்கு நீண்ட காலம் நடந்து வந்தது. பின்னர் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கிய முன்னறிவிப்பின்படி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அவ்வழக்கில் வெற்றி கிடைத்தது. சுவர் உடைக்கப்பட்டது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வக்கீல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தகவல் தராமல் மிர்ஸா இமாமுத்தீன் மற்றும் நிஸாமுத்தீன் ஆகியோரிடம் நஷ்டஈடு கேட்டு வழக்கு தொடர்ந்து விட்டார். அதன் காரணமாக அவர்களின் சொத்துகளை ஜப்தி செய்ய உத்தரவிடப்பட்டது. ஏனென்றால் நஷ்டஈடு வழங்க இரண்டு பேரிடமும் ஒன்றும் இல்லை. எனவே அவ்விருவரும் பகைமைக்கு இடையில் நீதிமன்ற தீர்ப்பு வந்த பிறகும் சகோதரனாக இருந்து கொண்டு இந்த ஜப்தி மூலமாக ஏன் எங்களை இழிவுபடுத்துகிறாய் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கடிதம் எழுதினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இதுபற்றி தெரிய வந்த போது அன்னார் வக்கீல் மீது மிகவும் அதிருப்தி அடைந்தார்கள். நான் எப்போது இந்த வழக்கு தொடரும்படி கூறினேன். உடனே கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவ்விருவருக்கும் கடிதம் எழுதினார்கள். நீங்கள் நிம்மதியாக இருங்கள். இவ்வனைத்தும் எனது கவனத்திற்கு வராமல் நடைபெற்றுள்ளது. ஜப்தி ஒன்றும் நடைபெறாது என பதில் கடிதம் அனுப்பினார்கள்.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இதுபற்றி எழுதுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இஷா நேத்தில் இல்ஹாம் அல்லது கனவு மூலம் அல்லாஹ் தகவல் தந்தான். இந்த சுமை அவர்கள் மீது மிகப் பெரியதாகும். இதன் காரணமாக எதிரியான உறவினர்கள் மிகவும் துன்பத்தில் உள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. அன்னார் உங்களுடைய எல்லா செலவும் மன்னிக்கப்படுகிறது. எந்த ஜப்தியும் நடைபெறாது என ஒருவர் மூலம் தகவல் கூறி அனுப்பி வைத்தார்கள்.

**ஹஸ்ரத் மீர் பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் குறிப்பாக ஆரம்ப காலகட்டத்தில் காதியான் மக்கள் ஜமாஅத்திற்கு மிகவும் துன்பம் கொடுத்து வந்தார்கள். ஏற்கனவே கூறப்பட்ட மிர்ஸா நிஸாமுத்தீன் மற்றும் இமாமுத்தீன் சாஹிப் போன்றவர்களும் குறிப்பாக காதியானைச் சேர்ந்த சீக்கியர்கள் துன்பம் தர முயன்று வந்தார்கள். அவர்கள் இருவரும் சீக்கியர்களை தூண்டி விட்டனர். எனவே அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களை குறிப்பாக எவர் சந்திப்பிற்காக வருவாரோ அவருக்கும் துன்பம் கொடுத்து வந்தனர். வெறும் பேச்சளவில் துன்பம் தருவது மாத்திரமல்ல. அடித்து உதைககும் நிலை கூட ஏற்பட்டு விட்டது. ஒரு வெளியூர் அஹ்மதி தவறுதலாக எதிரியின் நிலத்தில் காலைக்கடன் கழிக்க சென்று விட்டாலும் கூட தங்களது கழிவுகளை கைகளால் எடுக்கும்படி கட்டாயப்படுத்தினார்கள். மேலும் பலமுறை கண்ணியமிக்க அஹ்மதிகள் பலர் அவர்களிடம் அடிவாங்கினர். அஹ்மதிகள் நதியிலிருந்து மண் எடுக்கச் சென்றால் அவர்கள் அஹ்மதியிடமிருந்து கூடையையும் மற்ற சாதனங்களையும் பிடுங்கி விடுவார்கள். தீய வார்த்தைகளால் ஏசிப்பேசி, அஹ்மதிகளை அடிப்பதற்கும் தயாராகி விடுவார்கள். தினமும் ஹஸ்ரத் சாஹிபிடம் மக்கள் புகார் செய்து வந்தனர். ஆனால் எப்போதும் பொறுமை செய்யும்படியே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். ஏச்சுப் பேச்சுகளைக் கேளுங்கள். அடிவாங்குங்கள். ஆனால் பொறுமை செய்யுங்கள். பலர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்து ஹுஸுர்! நீங்கள் எங்களுக்கு இவர்களுடன் சண்டையிட மட்டும் அனுமதி வழங்குங்கள். பின்னர் நாங்கள் அவர்களை சரியாக்கி விடுவோம் என கூறினர். ஆனால் இல்லை பொறுமை செய்யுங்கள் என்றே ஹுஸுர் கூறி வந்தார்கள். ஒருநாள் காபூலிலிருந்து

இடம்பெயர்ந்து வந்த ஒருவர் எதிரிகளின் துன்பங்களை எடுத்துக் கூறி அவர்களோடு சண்டையிட அனுமதி கோரினார். அதற்கு ஹஸ்ரத் சாஹிப் அவர்கள், பாருங்கள் இங்கு அமைதியாக, பொறுமையாக இருக்க முடிந்தால் இருங்கள். இல்லை. சண்டையிடத்தான் வேண்டுமென்றால் காபூல் சென்று விடுங்கள் என பதிலளித்தார்கள்.

ஒருமுறை ஓர் ஏழை அஹ்மதி தனது வீட்டிற்காக நதியிலிருந்து மணல் அள்ளினார். சீக்கியர்கள் கூட்டமாக தடிகள் ஏந்தி வந்து அந்த அஹ்மதியின் வீடு மீது தாக்குதல் நடத்தினர். முதலில் அஹ்மதிகள் விலகியிருந்தனர். ஆனால் அவர்கள் அப்பாவி மக்களை அடித்து உதைத்து சில வீடுகளுக்கு சேதம் ஏற்படுத்திய போது அஹ்மதிகளும் அவர்களுடன் சண்டையிட்டார்கள். இருதரப்பினரும் காயமடைந்தார்கள். இறுதியில் தாக்குதல் செய்தவர்கள் திரும்பி ஓடி விட்டார்கள். அஹ்மதிகள் தங்களைக் கண்டு பயப்படவில்லை. மாறாக, தங்களுடைய இமாமுக்குதான் உண்மையில் பயப்படுகின்றார்கள் என்பதை முதன்முறையாக அஹ்மதி அல்லாதவர்கள் காதியானில் புரிந்து கொண்டார்கள். அதன் பிறகு காவல்துறை இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தியது. அஹ்மதிகள் உண்மையில் அநீதியிழைக்கப்பட்டவர்களாக இருந்தனர். அஹ்மதி அல்லாதவர்கள் கூட்டமாக கூடி ஒரு அஹ்மதியின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தினார்கள். எனவே அவர்களை கைது செய்யும் நிர்பந்தத்திற்கு அவர்கள் ஆளாவார்கள். கைவிலங்கு போட்டு விடுவார்கள் என்பதை தெரிந்து கொண்டு அவர்களின் ஆட்கள் ஹஸ்ரத் சாஹிபிடம் ஓடி வந்து எங்களிடம் தவறு ஏற்பட்டு விட்டது. ஹுஸூர் எங்களை மன்னித்து விடுங்கள் என வேண்டினர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர்களை மன்னித்து விட்டார்கள்.

**ஹஸ்ரத் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி எழுதுகின்றார்கள்:**

மீரட்டிலிருந்து அஹ்மத் ஹுஸைன் என்பவர் கிழக்கிந்திய மொழிகளின் முஜத்தித் என தன்னை கூறி வந்தார். அந்த நேரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக தமது பத்திரிகையில் மிகவும் மோசமான தரக்குறைவான கட்டுரைகள் வெளியிட்டு வந்தார். இவ்வாறாக ஜமாஅத் மக்களின் உள்ளத்தை புண்படுத்தி வந்தார். மீரட் ஜமாஅத் குறிப்பாக வேதனைக்குள்ளானது. ஏனென்றால் அங்கிருந்து தான் அது வெளியாகி வந்தது.

1902 அக்டோபர் 2-ல் நடைபெற்ற சம்பவம்: மீரட் ஜமாஅத் தலைவர் ஷேக் அப்துர் ரஷீத் சாஹிப் ஒரு கண்ணியமிக்க பொறுப்பாளர் மற்றும் வியாபாரி ஆவார். அவர் வருகை தந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் நான் சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர உள்ளேன் எனக் கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு இறைவனின் நீதிமன்றமே போதுமானது. நாம் இறைவனின் திட்டத்திற்கு மாற்றமாக செயல்பட்டால் அது பாவமாகி விடும். எனவே பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை மேற்கொள்வது அவசியமாகும் என பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு செய்த அறிவுரையை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் கூறியதாக கூறுகின்றார்கள்.

ஒருமுறை மியான் அலாவுதீன் சாஹிப் மற்றும் ஒரு தத்துவவாதி ஹஸ்ரத் அப்துல் கரீம் சாஹிப் அவர்களுடன் அவமரியாதையாக நடந்து கொண்டார்கள். அதனால் அன்னார் அந்த பிலாஸபர் அவர்களுக்கு ஓங்கி ஒரு அடி கொடுத்தார். இதன் மூலமாக அவர் மேலும் கோபமடைந்து தகாத வார்த்தைகளை பேசத் தொடங்கினார். அதனால் வேறு சிலரும் தத்துவவாதியை நன்கு அடித்தனர். அதனால் அவர் தெருவில் நின்று கூச்சலிடத் தொடங்கினார் கேட்கும் அளவுக்கு அவரது சப்தம் மேலும் அதிகமானது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மக்ரிப் தொழுகைக்காக பள்ளிவாயிலுக்கு வருகை தரும் போது அன்னாரின் முகத்தில் ஒரு அதிருப்தி தென்பட்டது. அப்போது ஹஸ்ரத் சாஹிப் இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் ஹஸ்ரத் அப்துல் கரீம் சாஹிப் அவர்களும் அங்கு பள்ளியில் இருந்தார்கள். அப்போது இவ்வாறு ஒருவரை அடிப்பது விரும்பத்தகாத செயலாகும். இது மிகவும் தவறான செயலாகும். ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அந்த தத்துவஞானியின் அநாகரிகமான நடைமுறை மற்றும் தனது குற்றமற்ற விஷயத்தை விளக்க

முற்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வாறு இருப்பினும் இது தகாத செயலாகும். இறைதூதர் உங்களுக்கிடையில் இருக்கும் போது என்னிடத்தில் கேட்காமல் நீங்களாகவே எதனையும் செய்திருக்கக் கூடாது என கோபத்துடன் பதிலளித்தார்கள். ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள் அதைக் கேட்டு அழுதார்கள். அதன் பின்னர் அந்த தத்துவஞானியை அடித்த பலரும் அவரிடம் சென்று மன்னிப்புக் கோரினர். அவருக்கு பால் வாங்கிக் கொடுத்தார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மக்களே! இதனை நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள். இது வானம், பூமியைப் படைத்த இறைவனின் முன்னறிவிப்பாகும். அவன் தனது ஜமாஅத்தை எல்லா நாடுகளிலும் பரப்பி விடுவான். ஆதாரங்கள் மற்றும் சான்றுகள் வாயிலாக எல்லாரின் மீதும் அவர்களுக்கு வெற்றியை வழங்குவான். உலகத்தில் கண்ணியத்தோடு நினைவு கூறப்படும் இந்த ஒரு மார்க்கம் மட்டுமே நிலைபெற்றிருக்கும் அந்த நாட்கள் வரவுள்ளன. மாறாக மிக அருகில் உள்ளன. இறைவன் இந்த மார்க்கம் மட்டுமே நிலைபெற்றிருக்கும். அந்த நாட்கள் வரவுள்ளன. மாறாக மிக அருகில் உள்ளன. இறைவன் இந்த மார்க்கம் மற்றும் அமைப்பின் மீது மிக சாதாரண பரக்கத்துகளை வழங்குவான். இதனை அழிக்க நினைக்கின்ற ஒவ்வொருவரையும் தோல்வியுறச் செய்வான். மேலும் கியாமத் வரை இந்த வெற்றி எப்போதும் நிலைபெற்றிருக்கும். இப்போது இவர்கள் என்னை ஏளனம் செய்கின்றார்கள் என்றால் அதனால் என்ன பாதிப்பு? ஏனென்றால் ஏளனம் செய்யப்படாத ஒரு நபியும் இல்லை.

**(நிகாகரிக்கும்) அடியார்களின் பரிதாபமே! எந்தத் தூதர் அவர்களிடம் வந்தாலும் அவர்கள் அவரை ஏளனத்திற்குள்ளாக்கவே செய்கின்றனர். (36:31)** என்று அல்லாஹ் கூறுவதற்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஏளனம் செய்யப்படுவதும் அவசியமானதாகும். எனவே எல்லா நபியும் ஏளனம் செய்யப்படுவது இறைவனுடைய ஓர் அடையாளம் ஆகும். எல்லாரின் கண் எதிரே மலக்குகளுடன் வானத்திலிருந்து ஒருவர் இறங்கினால் அவரை எவர் ஏளனம் செய்வார்?

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திலிருந்து இரு மலக்குகளின் தோளில் கைகளை வைத்து இறங்குவார்கள் என்பது அஹ்மதியல்லாதவர்களின் நம்பிக்கையாகும். அதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இவ்வாறு இறங்கினால் யார் ஏளனம் செய்வார்?

ஆக இந்த சான்றிலிருந்தும் வானத்திலிருந்து ஈஸா இறங்குவார் என்பது பொய்யான கற்பனையாகும் என்பதனை அறிவுடையவர் புரிந்து கொள்ள முடியும். நம்முடைய எதிரிகள் நினைவு வைத்துக் கொள்ளட்டும். இப்போது உயிருடன் இருப்பவர்கள் அனைவரும் மரணித்து விடுவார். ஆனால் அவர்கள் எவராலும் ஈஸா (அலை) அவர்கள் வானத்திலிருந்து இறங்குவதை காண இயலாது. பின்னர் அடுத்து அவர்களது சந்ததியும் மரணித்து விடுவர். அவர்களில் எவராலும் வானத்திலிருந்து ஈஸப்னு மர்யம் இறங்குவதை காணமாட்டார்கள். பின்னர் அவர்களது பிள்ளைகளின் பிள்ளைகளும் மரணித்து போய் விடுவார்கள். அவர்களிலும் எவராலும் மர்யமின் மகன் வானத்திலிருந்து இறங்குவதை பார்க்கமாட்டார்கள். அப்போது அவர்களின் உள்ளங்களில் அல்லாஹ் அச்சத்தை போடுவான். சிலுவை மேலோங்குவதற்குரிய காலமும் கடந்து விட்டது. உலகமும் மாறி விட்டது. ஆனால் இதுவரை மர்யமின் மகன் வானத்திலிருந்து இறங்கவில்லையே! அப்போது அறிவுடையவர்கள் முழுவதுமான இக்கொள்கையிலிருந்து விலகிவிடுவார்கள். இன்றிலிருந்து மூன்று நூற்றாண்டு முழுமையடைந்திருக்காது. ஈஸாவை எதிர்பார்த்திருக்கும் முஸ்லிம்களும், கிறித்தவர்களும் மிகவும் நம்பிக்கையிழந்து இந்த பொய்க் கொள்கையை விட்டு விடுவார்கள். உலகில் ஒரே மார்க்கமும் ஒரே தலைவரும் தான் இருப்பார்கள்.

நான் விதை விதைக்கவே வந்துள்ளேன். எனவே என் கைகளினால் அந்த விதை விதைக்கப்பட்டுள்ளது. அது இனி வளரும்; கனி தரும். அதனை தடுக்கின்றவர் எவரும் இல்லை.

எதுவரை நீங்கள் பொறுமை செய்வீர்கள் என்று நம்மீது போலி அனுதாபம் கொண்டு சிலர் ஆட்சேபனை செய்கின்றார்கள். பலவீனர் சிலர் அதன் தாக்கத்திற்கு ஆளாகி விடுகின்றனர். நம்மீது ஏன் இந்த

அக்கறை தெரியவில்லை. நீங்கள் உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய மறுமையை சரி செய்து கொள்ளுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த சோதனைகள், துன்பங்கள் கொஞ்ச நாட்களில் விலகிவிடும் என்று ஒருபோதும் கூறவில்லை. மேலும் அஹ்மதிய்யத்தின் பெரும்பான்மை உலகில் 30, 40 ஆண்டுகள் அல்லது 100 ஆண்டுகளில் ஏற்பட்டு விடும் எனவும் கூறவில்லை. மாறாக கூறினார்கள். இன்றைய நாளிலிருந்து மூன்று நூற்றாண்டு முழுமையடைந்திருக்காது. அதாவது 107 வருடங்களுக்கு முன்னர் அவர்கள் கூறியதாகும். இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் எல்லா எதிர்ப்பிற்கிடையிலும் பொறுமை மற்றும் துஆவுடன் 198 நாடுகளில் பரவி விட்டது. அனுதினம் ஜமாஅத் முன்னேறி விடுகிறது. உலகின் எல்லா பகுதிகளிலும் இன்று நாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பார்க்கின்றோம். இந்த முன்னேற்றம் தான் எதிரிகளை குழப்பமடைய செய்துள்ளது. ஜமாஅத் முன்னேறி வருவது எதிரிகளுக்கு தென்படுவதால்தான் எதிர்ப்பும், பகைமையும் ஜமாஅத்திற்கு எதிரான சதித்திட்டங்களும் அதிகரித்து வருகின்றன. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விதைத்த விதை அன்னார் கூறியது போன்று வளர்ந்து பரவி கனி தந்து கொண்டுள்ளது. ஆம், கனி தரக்கூடிய பசுமை மரங்களிலும் இயற்கை சட்டத்திற்கேற்ப சில சமயங்களில் காய்ந்த கிளைகள் தென்பட்டு விடுகின்றன. அதுபோன்ற கிளைகளை மரத்தின் எஜமானன் வெட்டி எறிந்து விடுவான். அதனால் அந்த மரம் பரந்து விரிந்து கனிதருவதில் எந்த பாதிப்பும் ஏற்படாது. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த பசுமையான மரம் பொறுமை மற்றும் துஆ என்ற துஆவினால்தான் பாதுகாக்கப்படும். இன்ஷா அல்லாஹ் கனிகளை தரும். எந்த கிளை இந்த தண்ணீரிலிருந்து பயன் பெறாதோ அது காய்ந்து விடும். அது வெட்டப்பட்டு விடும்.

எனவே நான் கூறியது போன்று எதிர்ப்புகள் அதிகரித்து வரும் இந்நிலையில் இன்னும் கூறப்போனால் எதிர்ப்புகள் குறைந்து போன ஆப்பிரிக்க நாடுகளிலும் கூட மீண்டும் எதிர்ப்பு இப்போது கிளம்பியுள்ளது. பொறுமை மற்றும் துஆவின் மூலம் ஒவ்வொரு அஹ்மதியும் முன்பை விட அதிகமாக அல்லாஹ்விடம் உதவி தேட வேண்டும். மேலும் அவர்கள் பசுமையான வளர்ந்து பரவி கனி தரும் மரத்தின் கிளையாக திகழ வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்குரிய நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 26.11.2010**

Translated by : **Maulvi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**